Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருநல்லூர் கல்யாண சுந்தரேஸ்வரர் கோயில் ஆய்வு

**ப. விமலநாயகி, முனைவர் பா. ஷீலா & முனைவர் வே. லதா**
**சிற்பத் துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

13

**ஆய்வுக் சுருக்கம்**

தற்போதைய திருவாரூர் மாவட்டம் , வலங்கைமான் வட்டத்தில் அமைந்துள்ள திருநல்லூரில் முற்காலச் சோழ மன்னன் கோச்செங்கண்ணனால் எழுப்பப்பட்ட மாடக் கோயிலான கல்யாண சுந்தரி உடனுறை அருள்மிகு கல்யாண சுந்தரேஸ்வரர் திருக்கோயிலைப் பற்றி வரலாற்று ஆய்வு முறையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

**முன்னுரை:**

திருநல்லூர் என்ற இவ்வூரானது சோழ மன்னர்கள் காலத்தில் சிறந்து விளங்கிய நகரமாக இருந்திருந்தமையைப் பல்வேறு ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் மற்றும் திருஞான சம்பந்தரால் தேவார பாடல் பெற்ற திருத்தலமாகவும், பிற்காலச் சோழர்கள் காலச் சிறப்பான நகரமாகவும் இவ்வூர் அமைந்திருந்தது. "மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையால் தொடங்கினோர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே" எனத் தம் அனுபவத்தினைப் பாடுகின்றார், தாயுமானவர்.

**மூர்த்தி : கல்யாண சுந்தரேஸ்வரர், பஞ்சவர்ணேஸ்வரர்,**

**தாயார் : கல்யாண சுந்திரி - கிரிசுந்திரி**

**தலம் : திருநல்லூர்**

**தீர்த்தம்:சப்த சகார தீர்த்தம்**

**அமைவிடம் : பாபநாசம் தலத்திற்க்கு கிழக்கே 5 கி.மீ தொலைவு**
**(வலங்கைமான்-பாபநாசம் சாலை)**

இக்கோயிலைப் பற்றிய தலபுராணம், சுவடிகள், கல்வெட்டுகள், சிறப்ங்கள், சிலைகள், கோயில் கட்டுமானம், இலக்கியங்கள், நீர்நிலைகள் முதலியவற்றைக் கொண்டு இக்கோயிலாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**தல புராணங்கள்:**

கோயில்களிலும் மடங்களிலும் தலபுராணங்கள் நாள்தோறும் படிக்கப்பட்டதால் அங்கு தலபுராணச் சுவடிகள் மிகுதியாக வைத்துக் காப்பாற்றப்பட்டன.(1) தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஓலைச்சுவடித்துறையில் 160 தலபுராணச் சுவடிகளும் டாக்டர் உ.வே.சா. நூலகத்தில் சுமார் 140 தலபுராணச் சுவடிகளும் தஞ்சை சரசுவதி மஹால் நுலகத்தில் சுமார் 50 தலபுராணச் சுவடிகளும் உள்ளன. சரசுவதி மஹால் நூலகத்தால், அச்சிட்டு வெளியிடப்பட்ட திருநல்லூர்ப்புராணம் எனும் நூலின் மூலம் கடையருக்கும் இங்கு கடைத்தேற்றம் என்ற உண்மை வெளிப்படுகின்றது.

தலபுராணங்கள் அந்தந்த கோயில்களைப் பாடுகின்றமையால் கோயில்கள் பற்றிய கருவூலங்களாக இவை விளங்குகின்றன. கோயிலின் அமைப்பு, அங்குள்ள மூர்த்தி வடிவங்கள், தீர்த்த

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

நிலைகள், வழிபாட்டுமுறைகள், முக்கிய விரதங்கள், விழாக்கள் போன்றவற்றை விளக்குவதால் வழிபாட்டுச் சிறப்புகளுடன் கலைச் சிறப்புகளையும் உணர்வதற்கு இவை துணைபுரிகின்றன.(2) இத்தகைய தல புராணங்களால் பழைய பாடல் பெற்ற தலங்கள் பலவும் சீரடைந்தன. கல்வெட்டுகளும் பழைய இலக்கிய பாடல்கள் பலவும் கிடைத்தன.(3)

துன்பமே மிகுந்த உலகில், வறுமையும் பிணியும் இறப்பும் பிறப்பும் சூழ்ந்துள்ள வாழ்க்கையில், ஊர்கள்தோறும் இறைவன் இருக்கின்றான்;அவன் அன்பர்களைக் காப்பாற்றவே இருப்பவன்: அவன் நம்மைக் கடைத்தேறச் செய்வான்; இப்பிறப்பில் இல்லாவிடினும் மறுபிறப்பில் நம்மை ஆட்கொள்வான் என்ற நம்பிக்கைகளை ஊட்டி மக்களை வாழ்விப்பனவே தலபுராணங்கள்(4)

**திருநல்லூர் தலபுராணம்:**

சுந்தரகிரி மகாத்மியம் என்ற பெயரில் திருநல்லூருக்கு பைங்காநாடு கணபதி சாஸ்திரிகள் வடமொழியில் புராணம் செய்தார். இப்புனிதத் தலத்தின் சிறப்பை சிவபெருமான் முருகனுக்கும், முருகன் நந்தி தேவருக்கும், நந்திதேவர் சனற்குமாரருக்கும், சனற்குமாரர் வியாசருக்கும், வியாசர் பிற முனிவர்களுக்கும் எடுத்துரைத்தனர் என இப்புராணம் கூறுகின்றது.

இந்நூல் 28 சுருக்கங்களையும் 1424 சுலோகங்களையும் உடையது. முதல் 7 சருக்கங்கள் பவுடி கோத்திரத்தில் இருந்தும் அடுத்த 10 சருக்கங்கள் காருடத்திலிருந்தும் அடுத்த 7 சருக்கங்கள் பிர்மாண்டத்திலிருந்தும், அடுத்த 3 சருக்கக்கள் சிவ ரகசியத்திலிருந்தும் 1 சருக்கம் உபமந்யு பக்த விலாசத்திலிருந்தும் எடுத்து ஆளப்பட்டுள்ளது.

' இலக்கண விளக்கம்' என்ற அரிய நூலை எழுதிய திருக்கமலை (திருவாரூர்) வைத்தியநாத தேசிகர் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தமிழில் இயற்றினார். இவருடைய புலமையை படிக்காசுப் புலவர், அந்தககவி வீரராகவ முதலியார், திருவேங்கடநாத அய்யர் போன்றோர் பாராட்டியுள்ளனர். 27 சருக்கக்களையும் 1013 விருத்தங்களையும் கொண்ட இந்நூல் கி.பி. 1908 -ல் அச்சிடப்பட்டது. 1979 இல் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் அடிக்குறிப்புகளுடன் இந்நூலைப் பதிப்பித்தது. இந்நூல் மிகச் சொல்லழகும் சைவச்சித்தாந்த கருத்துகளும் கொண்டுள்ளது. சிற்சில இடங்களில் கம்பராமாயணச் சாயலையும் கொண்டது.


மூலவர் - கல்யாண சுந்தரேஸ்வரர்



திருக்கோயில் பெயர்ப் பலகை



**இலக்கியங்களில் நல்லூர்**

தேவாரம், பெரியபுராணம், திருத்தொண்டர் புராணசாரம் மற்றும் திருப்புகழ் என பல நூல்களிலும் நல்லூர் கல்யாண சுந்தரரேஸ்வரர் போற்றப்படுகிறார்.

திருநாவுக்கரசர் மற்றும் திருஞான சம்பந்தரின் தேவாரப்பாடல்கள் எளிமையாகவும் இனிமையாகவும் உள்ளன. சிவனுடைய பல்வேறு மூர்த்தங்கள் பாடல்களில் கூறப்பட்டுள்ளன. முதல் மூன்று திருமுறைகளில் தரப்பட்டுள்ள பாடல்கள் திருஞான சம்பந்தர் அருளியது.

திருமுறை (1-86) 11 பாடல்கள் பெரியபுராணம் 369-379

திருஞான சம்பந்தரின் முதல் திருமுறையில் இடம்பெறும் நல்லூர் பதிகத்தில் முதல்பாடல் 'நடராஜ பெருமானைச் சுட்டுகிறது. இரண்டாம் பாடல் உமையுடன் ரிஷபத்தில் அர்த்த நாரீசுவரரையும், ஆறாம் பாடல் கரியுரித் தேவரையும், ஏழாம் பாடல் திரு நீலகண்ட சிவனையும், எட்டாம் பாடல் காமதகனத்துடன் இராவண அனுகிரக மூர்த்தி வடிவையும் ஒன்பதாம் பாடல் அடிமுடி காணாத அண்ணாமலையைச் சுட்டுகிறது. பத்தாம் பாடல் சமண பௌத்தரைப் பழிக்கும் பாடலாகவும் பதினொன்றாம் பாடல் பதிகம் பாடுவதன் பயனைச் சுட்டுவதாகவும் அமைந்துள்ளது.

**தண்ணம் புனல்காழி ஞான சம்பந்தன்**
**நண்ணும் புனல்வேலி நல்லூர்ப் பெருமானை**
**வண்ணம் புவனமாலை வைகல் ஏத்துவார்**
**விண்ணும் நிலனுமாய் விளங்கும் புகழாரே.**

குளிர்ந்த நீர் சூழ்ந்த சீர்காழி மாநகர் ஞானசம்பந்தன் புனல் சூழ்ந்த நல்லூர்ப் பெருமானைப் பாடிய புகழ்மாலையாகிய பாடல்களைப் பாடிப்பரவுபவர் விண்ணோரும் மண்ணோரும் புகழ விளங்குவார்கள்.(5)

**திருமுறை 2-193 11 பாடல்கள் பெரியபுராணம் 370-371**
**திருமுறை 3- 341 11 பாடல்கள் பெரியபுராணம் 370-377**
**அப்பர் பெருமாள் பாடிய நான்காம் திருமுறை**
**( திருவிருத்தம் அகத்துறை குறிப்பு உடையது)**
**திருமுறை 4-97 11 பாடல்கள் பெரிய புராணம் 198**
**ஆறாம் திருமுறை - திருத்தாண்டகம்**
**( திருமுறை 6-14) 11 பாடல்கள் பெரியபுராணம் 196**

திருநாவுக்கரசர்க்கு நல்லூர்ப்பெருமான் திருவடி தீக்கையை இத்தலத்தில் புரிந்ததை அவரே கூறுகிறார். திருச்சத்திமுற்றத்தில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தீசரை வழிபட்டுத் திருவடிதீக்கை புரியுமாறு அப்பர் விண்ணப்பிக்க, இறைவன் திருநல்லூருக்கு வருமாறு திருவாய் மலர்ந்தருளினார். அவ்வாறே அப்பர் நல்லூர் வந்தபோது தீக்கையும் புரிந்தார் எனச் சேக்கிழார் பெருமானும் கூறுவார்.

**நற்றவ நல்லூர்ச் சிவன்திருப் பாதமதன் சென்னிவைக்கப்**
**பெற்றவன் மற்றிப் பிறப்புற வீரட்டர் பெய்கழற்றான்**

**உற்றவன் உற்ற விடமடையாரிட ஒள்ளமுதாத்**

**துற்றவன் ஆமூரில் நாவுக் கரசு எனும் தூமணியே**

நற்றவம் பொருந்திய நல்லூரில் சிவன் தம் திருப்பாதத்தைத் தலையில் வைக்கும் பேறு பெற்றவர் அப்பர்பெருமான். இவர் பிறப்பு நீங்க திருவீட்டார் கழலினைப் பற்றியவர், விடத்தை நல்லமுதாக மாற்றிவராகிய சிவனுடைய திருவாமூரில் தோன்றிய தூமணியாவார் நாவுக்கரசர். (6)

திருநாவுக்கரசர் நல்லூர் தலத்திற்கு எழுத்தருளியது குறித்த பெரிய புராணப் பாடல்கள் 1458 முதல் 1480 முடிய உள்ளன.

திருஞானசம்பந்தர் திருநல்லூர்க்கு எழுந்தருளிப் பதிகம் பாடிய வரலாறு குறித்த பெரிய புராணத் தகவல் 2263 முதல் 2275 முடிய உள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனார் திருநல்லூர்ப் பதிகம் பாடிய விவரம் குறித்த பெரியபுராணக் குறிப்பு

**"அங்குநின்று திருக்குடமூக்கு அணைந்து பணிந்து பாடிப்போய்**

**மங்கை பாகர் வலஞ்சுழியை மருவிப்பெருகும் அன்புருகத்**

**தங்கு காதலுடன் வணங்கித் தமிழால் பரசி அரசினுக்குத்**

**திங்கள் முடியார் அடியளித்த திருநல்லூரைச் சென்றடைந்தார்".**

உமாபதி சிவாச்சாரியாரின் திருத்தொண்டர் புராணச் சாரத்தில் வரும் அமர்நீதி நாயனார் வரலாறு

**" பழையாறை வணிகர்அமர் நீதியார்பால்**

**பரவுசிறு முனிவடிவாய்ப் பயிலும் நல்லூர்க்**

**குழைகாதர் வந்தொருகோ வணத்தை வைக்கக்**

**கொடுத்தனை எடுத்தொளித்துத் குளித்துவந்து**

**தொழிலாகும் அது வேண்டி வெகுண்டு நீர்த்**

**துலையிலிடும் கோவணநேர் தூக்குமென்ன**

**எழிலாகும் பொன்மனைவி இளஞ்செய் ஏற்றி**

**ஏறினர்வா னுலகுதொழ ஏறி னாரே."**

**பெரியபுராணமும் அமர்நீதி நாயனாரும்**

அமர்நீதி நாயனார் புராணம் பெரியபுராணத்தில் திருமலைச் சருக்கத்தில் பதின்மூன்றாவது இயலாக அமைந்துள்ளது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இவர் ஏழாவது நாயனாராகக் கூறப்படுகிறார். பெரியபுராணத்தில் 502 ஆம் பாடல் தொடங்கி 549 ஆம் பாடல் வரை இவருடைய வரலாறு கூறப்பட்டுள்ளது.

நல்லூர் திருக்கோயிலில் இரண்டு இடங்களில் அமர்நீதி நாயனார் அவர்தம் மனைவி மகனுடன் இருப்பது போன்ற சிற்பங்கள் உள்ளன. அவை

1. சபதம் செய்தபின், நாயனார் துலையில் ஏறும் காட்சி
2. சிவ பதம் எய்தும் காட்சியும் எனலாம்.

அருணகிரி நாதர் பாடிய திருநல்லூர் முருகன் திருப்புகழ் ( 766 ஆம் பாடல்)

" மூல முண்டகனு பூதி ............................
வந்துறைநலூர மர்ந்துவளர் தம்பிரானே"

திருத்தொண்டர் சதகம் - மலைக் கொழுந்து நாவலர் பாடியது

" அருள்பெறும் .............
................. மாணிக்க மலை நாதனே"

**கட்டடக்கலை :**

திருஞான சம்பந்தர் தம் தேவாரப்பதிகத்தில் திருநல்லூர் மாடக்கோயிலைப் பற்றி கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

**" திருநல்லூர் மலைமல்கு கோயிலே ஆக மகிழ்ந்திரே**
**திருநல்லூர் மல் ஆர்ந்த கோயிலே கோயில் ஆக மகிழந்தீரே"**

இப்பதிகத்தின் மூலம் ஞானசம்பந்தர் காலத்திலேயே இம்மாடக் கோயில் உள்ளதை அறிய முடிகிறது. இதுபோன்ற மாடக்கோயில்கள் ஆவூர், குடவாசல், கீழ்வேளூர், தேவூர் வலிவலம் போன்ற 70 க்கும் மேற்பட்ட இடங்களில் அமைந்துள்ளன.

திருநல்லூர் திருக்கோயில் சற்றேறக்குறைய ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மூலவர் வீற்றிருக்கும் கருவறை கட்டுமலை மீது கிழக்குநோக்கி அமைந்துள்ளது.கருவறைத் தொடர்ந்து அர்த்த மண்டபம் முகமண்டபம், மகாமண்டபம் காணப்படுகிறது. முகமண்டபத்தை ஒட்டி மகாமண்டபத்தின் வலப்புறம் கருவறை மற்றும் அர்த்த மண்டபத்துடன் கூடிய அம்மன் சன்னதி அமைந்துள்ளது. இச்சன்னதியை தொடர்ந்து வழிபாட்டுத் திருமேனிகள் உள்ள பள்ளியறை காணப்படுகிறது. மாடக்கோயில் என்ற அமைப்பில் இவை அனைத்தும் தரைமட்டத்திலிருந்து சுமார் 30 அடி உயரம் உள்ள மேல்தளத்தில் காணப்படுகிறது. மாடக்கோயிலின் கருவறைக்கு 42 படிகள் கடந்து செல்ல வேண்டும். கீழ்தளத்தில் உள்ள திருச்சுற்றின் நான்கு புறமும் மண்டபங்கள் அமைந்துள்ளன. திருச்சுற்றின் தென்புறம் சோமாஸ்கந்தர் சன்னதியும் அதனையடுத்து, உள் திருச்சுற்றில் 63 நாயன்மார்களின் 2 அடி உயர படிமங்களும் தென் மேற்கு மூலையில் சப்தமாதர் படிமங்களும் அமைக்கப்பட்டுள்ளன. வடப்புறம் சண்டிகேஸ்வரர் சன்னதி தனி விமானத்துடன் காணப்படுகிறது. இத்திருச்சுற்றாலையானது நான்கு புறமும் சுமார் 60 அடி உயரமுடைய மதில்களால் சூழப்பட்டுள்ளது. திருச்சுற்றின் முகப்புப் பகுதியில் மையக் கோயிலின் உள்கோபுரம் அமைந்து உள்ளது.

உள் கோபுரத்தைத் தொடர்ந்து வெளித்திருச்சுற்று அமைந்துள்ளது. மூலவரை நோக்கிவாறு நந்திகேஸ்வரர் படிமம் அமைக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து பலிபீடமும் கொடிமரமும் காணப்படுகின்றன. இச்சுற்றாலையின் இருபுறமும் மண்டபங்களும் அலுவலகமும் அமைந்துள்ளன. வெளிச்சுற்றை அடுத்து திருக்கோயிலின் முதல் கோபுரம் கிழக்கு நோக்கியவாறு பல்வேறு கலை வேலைப்பாடுகளுடன் காட்சியளிகின்றது. முதல் கோபுர நுழைவுவாயிலின் மரக்கதவில் பல்வேறு நுணுக்கமான சிற்பங்கள் காணப்படுகின்றன. வெளிச்சுற்றாலை சுமார் 30 அடி உயரமுடை மதில் சுவர்களால் சூழப்பட்டுள்ளது. இக்கோயிலின் மேற்கு திசையில் ஒரு நுழைவுவாயில் கோபுரம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

காணப்படுகிறது. கோயிலின் எதிர்புறம் சப்த சாகர தீர்த்தம் என்றழைக்கப்படும் திருக்குளம் அமைந்துள்ளது.

**கல்வெட்டுகள்**

நல்லூர் கல்யாண சுந்தரர் கோயிலில் இருக்கும் கல்வெட்டுகளை மந்திய மாநில தொல்லியல் துறைகள் படியெடுத்துள்ளனர். பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள் 23 இடம்பெற்றுள்ளன. கருவறைத் தென்புறச்சுவரில் மாடக்கோயிலில் உள்ள தொன்மையான கல்வெட்டு உள்ளது. இறைவன் பெயர் "நல்லூர் மகாதேவன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உத்தம சோழன் மகாதேவன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உத்தம சோழன் கல்வெட்டில் ஊர்ப்பெயர் திருநல்லூர் என்று உள்ளது. உத்தம சோழன் காலம்தொட்டு மூன்றாம் இராஜேந்திர சோழன் காலம் வரை பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டமைக்கான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. போசள மன்னாகிய வீரராமநாதனுடைய ஒரு கல்வெட்டு கோயில் திருச்சுற்று மாளிகை மேற்குப்புற ஜகதியில் உள்ளது.

**சிற்பங்கள்**

**கற்சிலைகளும் செப்புப்படிமங்களும்**

**கல்யாண சுந்தரேஸ்வரர்**

இத்திருக்கோயிலின் கருவறைக்குள் 3 1/2 X1 1/2 என்ற நீள சதுர வடிவில் ஆவுடையும் அதன்மேல் 2 அடி உயர பாண இலிங்கமும் உள்ளது. இம்மூலவர் சுயம்பு லிங்கம் என்றழைக்கப்படுகிறது. சுயம்புவாகத் தோன்றிய மூலவர் ஒவ்வொரு நாளும் ஐந்து நேரங்களில் ஐந்து நிறங்களில் காட்சி தருகிறார். தாமிரம், இளஞ்சிவப்பு, பொன்னிறம், உருகிய தங்கம், நவரத்தின பச்சை என மாறிமாறி காட்சி அளிப்பதால் பஞ்சணேஸ்வரர் என்று அழைக்கப்படுகிறார். மூலவருக்கு பின்புறம் இதன் மேற்குச் சுவரில் கல்யாண சுந்தரர் கிரிசுந்திரி படிமங்கள் சுதைவடிவில் காணப்படுகிறது. கல்யாண சுந்தர படிமத்தின் மேல் வலதுகையில் மழுவும், மேல் இடதுகையில் மானும், கீழ் வலது கை கிரிசுந்திரி வலது கையைப் பற்றிய பாங்கிலும், கீழ் இடது கை வரத ஹஸ்தத்திலும் உள்ளது. மணமக்களின் இருபுறமும் பிரம்மாவும், விஷ்ணுவும் காட்சி தருகின்றனர். பிருங்கி முனிவர் வண்டு உருவில் இறைவனை மட்டும் வலம் வந்து வணங்கியதால் லிங்கத்தின் மீது சில துளைகள் உள்ளன. [(7)]

**கிரிசுந்தரி அம்மன் (என்கிற) கல்யாணசுந்தரி**

இத்திருக்கோயிலில் கிரிசுந்திரி என்ற பெயருடன் தெற்குப் பார்த்தவாறு அம்பாள் அருள்பாலிக்கிறார். பத்ரபீடத்தின் மேல் நான்கு திருக்கரங்களுடன் சமபாதமாக நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். பின் வலது கரத்தில் அக்கமாலையும் இடது கரத்தில் தாமரை மலரும் வைத்துள்ளார். முன்னிரு கரங்கள் அபய வரதமாக உள்ளன. கரண்ட மகுடம், பத்ர குண்டலம், தோள் மாலை, அட்டிகை, ஆரம், திருமாங்கல்யம், கேயூரம், கைவளை முதலிய ஆபரணங்களை அணிந்துள்ளார்.

**கணபதி**

இக்கோயிலில் நான்கு கணபதி படிமங்கள் காணப்படுகின்றன.. அவற்றில் மூன்று

கற்சிற்பங்களும் ஒரு செப்புத் திருமேனியும் உள்ளன.

**உச்சிட்ட கணபதி**

கணபதியும் அவரது சக்தியும் (காம) சிற்றினப லீலைகளில் ஈடுபட்டிருப்பதுபோல் காட்டப்பட்டுள்ளது. இப்படிமம் இத்திருக்கோயிலின் முக மண்டபத்தின் தென்புற தேவக்கோட்டத்தில் காணப்படுகிறது., பத்ரபீடத்தின் நான்கு கைகளுடன் அமர்ந்தநிலையில் இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது. மேல் வலது கரத்தில் அங்குசமும் மேல் இடக்கரத்தில் பாசமும் உள்ளது. கீழ் வலது கரத்தில் மோதகமும் கீழ் இடது கரமானது தேவியை தழுவியபடியும் உள்ளது. கரண்ட மகுடத்தால் தலையானது அலங்கரிக்கப்பட்டுள்ளது. லீலாசனத்தில் அமர்ந்துள்ள கணபதியின் மடிக்கப்பட்ட தொடையின்மீது தேவி அமர்ந்துள்ளார். இச்சிற்பத்தின் படிமக்கலை கூறுபாடுகளைக் கொண்டு கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

**முருகன்**

இக்கோயில் உள்ள சுமார் 1 1 ஃ2 அடி உயரமுள்ள முருகன் செப்புதிருமேனி பத்மபீடத்தில் நின்ற நிலையில் 6 தலைகள் 12 கைகளுடன் காட்சியளிக்கிறது.

இக்கோயிலின் மேற்கு திருச்சுற்றாலை மண்டபத்தில் தனி சன்னதியில் முருகன் வள்ளி தெய்வானையுடன் காட்சி தருகிறார். பத்மபீடத்தின் மேல் சமபங்கத்த்ல் நின்ற கோலத்தில் மயில் வாகனத்துடன் காணப்படுகிறார். இப்படிமம் கி.பி 17 ஆம் நூற்றாண்டை சேர்ந்தாகும்.

முருகனின் வலது புறம் வள்ளி, இடது புறம் தெய்வாணை படிமங்கள் காணப்படுகிறது.

**நடராஜர்**

சிவனுக்கு வழங்கப்பட்ட பல பெயர்களில் நடராஜர் என்பதும் ஒன்றாகும். இக்கோயிலுள்ள 15 செப்புத் திருமேனிகளுள் இரண்டு நடராஜ திருமேனிகளும் அடங்கும். செவ்வக வடிவமான பீடத்தின் மீது உள்ள தாமரை இருக்கையில் உள்ள முயலகனின் முதுகின் மீது வலது காலை ஊன்றி, இடது காலை தூக்கி ஆடும் நிலையில் நான்கு கரங்களுடன் ஒரு செப்புத் திருமேனி வார்க்கப்பட்டுள்ளது.

எட்டுத் திருக்கரங்களுடன் காணப்படும் **சதுரத் தாண்டவர்** நடராஜ படிமம் இவ்வூருக்கு பெருமை சேர்க்கிறது. நீள் சதுரவடிவ பத்ர பீடத்தின் மேல் முயலகன் அமர்ந்திருக்க அவன் தலைமேல் வலது காலை ஊன்றியும், இடது கால் வலதுகாலைத் தொட்டவாறும் சதுர தாண்டவ கோலத்தில் மற்றொரு செப்புப்படிமம் அமைக்கப் பட்டுள்ளது. இப்படிமம் கி.பி. 10 நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று பி.ஆர். சீனிவாசன் குறிப்பிடுகிறார். [8]

உள்சுற்றில் 63 நாயன்மார்கள், கன்னி விநாயகர், முசுகுந்த லிங்கம், சங்கு கர்ண லிங்கம், சுமதி லிங்கம், வர்ண லிங்கம், விஷ்ணு லிங்கம் ஆகிய சிற்பங்கள் உள்ளன. தொடர்ந்து நடராஜர், பைரவர், சனீஸ்வரர், சூரியன், சந்திரன், மகாலிங்கம் , வனலிங்கம், ஜ௫ரஹரேஸ்வரர், ஜ௫ரஹரேஸ்வரி கோஷரத்தில் தட்சிணா௴ர்த்தி, உச்சிஷ்டகணபதி, கைலாய கணபதி ஞான தட்சிணா௴ர்த்தி ஆகியோர் உள்ளனர். திருச்சுற்று மண்டபத்தில் உமாமகேசுவரர் சங்கர நாராயணர் , லிங்கோத்பவர், சுஹாசனர், நடராஜர், ரிஷபாரூடர் உள்ளிட்ட சுதைச்சிற்பங்கள்

காணப்படுகின்றன. குந்திதேவிக்கும் அமர்நீதிநாயனாருக்கும் சிற்பங்கள் அமைக்கப் பட்டுள்ளன. வெளிச்சிற்றில் நந்தவனம், மடப்பள்ளி, அஷ்ட புஜ மகாகாளியம்மன் சன்னதி ஆகியவை உள்ளன.

**தல சிறப்புகள்**

திருநாவுக்கரசருக்கு திருவடி சூட்டியதால் பக்தர்களுக்கு பெருமாள் கோயிலைப்போல சடாரி வைக்கும் வழக்கம் இங்குள்ளது. அமர்நீதி நாயனாரை சிவன் இத்தலத்தில் ஆட்கொண்டார். குந்திதேவி தன் தோஷம் நீங்க இத்தலத்தில் உள்ள சப்தசாகரதீர்த்தில் நீராடினாள். அகத்தியருக்கு இறைவன் திருமணக்காட்சியைக் காட்டி அருளினார்.

**முடிவுரை :**

ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் நடந்த சண்டையின்போது கயிலை மலையிருந்து வாயுவால் தூக்கி எறியப்பட்ட சிகரங்களில் ஒன்று இத்தலம் என்பதால் சுந்தரகிரி எனப்படுகிறது. இங்கு வில்வமரத்தடியில் சுயம்பு லிங்கமாக இறைவன் தோன்றினார். திருவாரூரில் தற்போது வீற்றிருக்கும் வீதிவிடங்க தியாகராஜ பெருமானை முசுகுந்தன் இந்திரனிடமிருந்து பெற்று இறைவனின் அருளின்படி இத்தலத்தில் மூன்று நாட்கள் வைத்து பூசை செய்து பின்னரே திருவாரூரில் பிரதிஷ்டை செய்தார். நவக்கிரக சன்னதி இல்லாத சிவதிருத்தலம் இதுவாகும். கடவுள் வழிபாட்டு முறைகளின் மூலம் உருவான புராணங்கள் தந்த கடவுளர்களின் திருவுருவங்களைப் படிமக் கலைமூலம் சிற்பங்கள் ஆக்கி அவற்றைக் கல்லாகக் காணாமல் கடவுளாகப் பார்ப்பதாலேயே தமிழர்கள் இன்றும் உருவ வழிபாட்டைக் கையாண்டு வருவதை உணர முடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

1. டாக்டர் வே. ரா. மாதவன், தமிழில் தலபுராணங்கள் (முதல் பகுதி) ப. 138
2. மேலது ப- 168
3. மேலது ப. 169
4. மேலது ப. 171
5. புலவர் பி.ரா.நடராசன், திருஞான சம்பந்தர் தேவாரம் - முதல் பகுதி , பக்-682-685.
6. ச. கிருஷ்ணமூர்த்தி கி. மான்விழி, நல்லூர் மாடக்கோயில் பக்.155
7. K.R. Srinivasan Temples of South India, P.63
8. K.R. Srinivasan , Bronzes of South Inidan, P.84, H. Krishna Sastri, south Indian image of Gods and Goddesses, Asian Educational Service - New Delhi.1986. p.74-75.